

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

அரசு உறுதிமொழிக் குழு

(2007 – 2008)

(பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவை)

இருபத்தொன்றாவது அறிக்கை

திருவண்ணாமலை மாவட்டம்

(மாவட்டப் பட்டியல்)

(பேரவைக்கு அளிக்கப்பெற்ற நாள்: 01 FEB 2008

சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை–600 009.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

அரசு உறுதிமொழிக் குழு

(2007 – 2008)

(பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவை)

இருபத்தொன்றாவது அறிக்கை

திருவண்ணாமலை மாவட்டம்

(பேரவைக்கு அளிக்கப்பெற்ற நாள்:)

சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை–600 009.

53-404—1

பொருளடக்கம்

பக்கங்கள்

குழுவின் அமைப்பு iii

அறிக்கை

1. முகவுரை v
2. குழுவின் கூட்டம் v
3. குழுவின் ஆய்வுப் பயணங்கள் .. .. .. v-vii
4. பொதுக் குறிப்புரைகள் vii

இணைப்பு–1

1. 2007–2008–ஆம் ஆண்டிற்கான குழுவால் நிறைவேற்றப் பெற்றனவாகவும், படித்துப் பதிவு செய்யப்பெற்றனவாகவும் கருதப்பெற்ற உறுதிமொழிகளின் விவரம்:–

   திருவண்ணாமலை மாவட்டம் (மாவட்டப் பட்டியல்) 1–24

இணைப்பு–2

2. குழு கூடிய நாட்கள் பற்றிய விவரம் 25

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

அரசு உறுதிமொழிக் குழு (2007–2008)

(பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவை)

(2007–2008 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் அமைப்பு)

(15.5.2007 அன்று அமைக்கப் பெற்றது)

தலைவர் :

1. திரு. தி. வேல்முருகன்

உறுப்பினர்கள்:

2. திரு. அன்பில் பெரியசாமி
3. திரு. கே.எல். இளவழகன்
4. திரு. க. குணசேகரன்
5. திரு. அ. சௌந்திரபாண்டியன் (குன்னூர்)
6. திரு. அ. சௌந்திரபாண்டியன் (வால்குடி)
7. திரு. பி. பலராமன்
8. திரு. கு. பாண்டுரங்கன்
9. திரு. த. மகேஷ் கிருஷ்ணசாமி
10. திரு. எச். வசந்தகுமார்
11. திருமதி ராணி வெங்கடேசன்
12. திருமதி ஜி. லதா

செயலகம்

திரு. மா. செல்வராஜ்	..	செயலாளர்
திரு. வெ.சி. சுப்ரமணியன்	..	கூடுதல் செயலாளர்
திரு. தி. கோவிந்தராசு	..	துணைச் செயலாளர்
திருமதி து. இராஜேஸ்வரி	..	சார்புச் செயலாளர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

அரசு உறுதிமொழிக் குழு (2007–2008)

(பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவை)

இருபத்தொன்றாவது அறிக்கை

பெறுநர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை,
சென்னை–600 009.

முகவுரை

1. 2007–2008 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் (பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவை) இருபத்தொன்றாவது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

குழுவின் கூட்டங்கள்

2. குழு 2007–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 29 ஆம் நாளன்று திருவண்ணாமலை மாவட்டத்தில் ஆய்வுப்பயணம் மேற்கொண்டது. அவ்வமயம் திருவண்ணாமலை மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை, கீழ் சீறுபாக்கம் ஊராட்சியில் புதிய குளம் அமைத்தல், சாத்தனூர் அணை, திருவண்ணாமலை நகராட்சி பேருந்து நிலையம், பழைய பேருந்து நிலையம், வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டிடம், மாவட்ட விளையாட்டு வளாகம், காவலர் குடியிருப்பு திருவண்ணாமலை ஆகிய இடங்களை குழு பார்வையிட்டது.

3. மேற்கூறப்பட்ட மாவட்டத்தில் குழு ஆய்வுப்பயணம் மேற்கொண்டபோது, பேரவையில் அமைச்சர்களால் அளிக்கப்பெற்ற உறுதிமொழிகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் பற்றிய 94 உறுதிமொழிகள் மீதான அறிக்கைகளை குழு ஆராய்ந்து அவற்றில் 21 உறுதிமொழிகள் நிறைவேற்றப்பெற்றனவாகவும், 2 உறுதிமொழிகளுக்கான பதில்களை படித்துப் பதிவு செய்யப்பெற்றனவாகவும், எஞ்சியுள்ள 71 உறுதிமொழிகளை நிலுவையில் வைத்து நடவடிக்கைத் தொடரலாம் என்றும் குழு முடிவு செய்யப்பெற்றது.

4. மேற்படி கூட்டத்தில் நிறைவேற்றப்பெற்றவை அல்லது படித்துப் பதிவு செய்யப்பெற்றவை எனக் கருதப்பெற்ற உறுதிமொழிகளின் விவரங்கள் இணைப்பு–1இல் உள்ளன. குழு சென்னை மற்றும் இதர மாவட்டங்களில் கூடிய நாட்கள் பற்றிய விவரங்கள் இணைப்பு–2–இல் உள்ளன.

குழுவின் ஆய்வுப் பயணங்கள்

5. கீழ்க்காணும் உறுதிமொழிகள் தொடர்பாக குழு 2007–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 29 ஆம் நாளன்று திருவண்ணாமலை மாவட்டத்தில் ஆய்வுப்பயணம் மேற்கொண்டு உறுதிமொழிகள் நிறைவேற்றப்பெற்றனவா என்று நேரிடையாக பார்வையிட்டதுடன் அவ்வுறுதிமொழிகள் குறித்த சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடியது. குழு நேரடியாக பார்வையிட்ட சில உறுதிமொழிகள் குறித்த விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:–

1. உறுதி மொழி எண்.190/2003, 481/2004 : திருவண்ணாமலை மாவட்டத்தில், மாவட்ட விளையாட்டு வளாகம் அமைக்கப்படுவது குறித்து மற்றும் மாவட்ட வளர்ச்சித் திட்ட அமைப்பதாகத் தெரிவித்து இன்னும் பணி துவங்காமல் உள்ளதால் விரைவில் வளர்ச்சித் திட்ட அமைக்க அரசு முன்வருமா என்பது குறித்து.

மாவட்ட விளையாட்டு அரங்கில் நீச்சல் குளம் அமைக்கும் பணியினை குழு பார்வையிட்டது. குழுவினை மாவட்ட விளையாட்டு அலுவலர் திரு. புகழேந்தி மற்றும் திட்ட அலுவலர் திரு. சீனிவாசன் ஆகியோர் வரவேற்று கீழ்க்கண்டவாறு குழுவிற்கு தெரிவித்தனர்.

நீச்சல் குளம் 16' X 25' என்ற அளவில் அமையவிருப்பதாகவும், இதற்காக 66 இலட்சம் மதிப்பீட்டில், ரூ.36 இலட்சத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் பொது நிதியிலிருந்து வழங்கப்பட்டிருக்கிறதென்றும், மீதமுள்ள தொகை பகுதி 2 திட்டத்தின்கீழ் அரசால் ஒதுக்கீடு செய்யப்படவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. பின்னர் அப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள டென்னீஸ் கோர்ட் மைதானத்தை குழு பார்வையிட்டது. டென்னீஸ் மைதானத்திலுள்ள மேடு பள்ளங்களை சரிசெய்திட குழு உத்தரவிட்டது. பின்னர் திறந்தவெளி விளையாட்டு அரங்கத்தினை குழு பார்வையிட்டபோது, வெளி விளையாட்டு அரங்கம் ரூ.48.40 இலட்சத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளதென்றும், தற்போது விளையாட்டுப் போட்டிகள் மட்டுமல்லாமல் அரசு விழாக்கள் போன்றவையும் இங்கே நடத்தப்படுகின்றன என தெரிவிக்கப்பட்டது. இது குறித்து குழுத் தலைவர் கருத்து தெரிவிக்கையில் ரூ.47,78,640 செலவில் சிறப்பான ஒரு விளையாட்டு அரங்கத்தை தமிழகத்திலேயே இல்லாத அளவிற்கு திருவண்ணாமலை மாவட்ட தலைநகரில் அமைந்து இருப்பதற்கு குழு உண்மையிலே பாராட்டுகிறதென்றும், இவ்விளையாட்டு அரங்கத்தினை அமைப்பதற்கு மூல காரணமாக இருந்த மாவட்ட ஆட்சித் தலைவரை குழு மனதாரப் பாராட்டுகிறதென்றும், இவ்வரங்கம் அனைவரையும் ஈர்க்கின்ற வகையில் மிகச் சிறப்பாக வடிமைக்கப்பட்டிருக்கின்றன என்றும், இவ்வளாகத்தினைப் பராமரித்திட ஒரேபொருவர்தான் இருக்கிறார் என்றும், கூடுதலாக ஒரு ஒப்பந்தப் பணியாளரை நியமனம் செய்வதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று குழு கேட்டுக்கொண்டது.

2. உறுதி மொழி எண்.424/2006 : திருவண்ணாமலை நகராட்சியில் உள்ள பேருந்து நிலையத்தை நவீன வசதிகளோடு மேம்படுத்துவது குறித்து.

குழு நகராட்சிப் பேருந்து நிலையத்தைப் பார்வையிடச் சென்றபோது நகராட்சி மண்டல இயக்குநர் திருமதி ஜெயலட்சுமி, நகராட்சி ஆணையர் திரு. நடராசன் மற்றும் நகராட்சிப் பொறியாளர் திரு. சந்திரன் ஆகியோர் குழுவினை வரவேற்று சீழ்க்கண்டவாறு குழுவிற்கு தெரிவித்தனர்.

இந்நகராட்சியின் மத்திய பேருந்து நிலையம் நவீன வசதிகளோடு மேம்படுத்திட ரூ.38 இலட்சம் மதிப்பீட்டில் மத்திய சுற்றுலா வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக ஒதுக்கீடு செய்யப்பட்டும், பொது நிதியிலிருந்து ரூ.41 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் அனைத்தும் தற்போது முடியும் தருவாயில் உள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. இது குறித்து குழு கருத்து தெரிவிக்கையில் நடைபாதையில் பதிக்கப்பட்ட வழுக்காத ஓடுகள் மேடு பள்ளமாக ஒட்டப்பட்டுள்ளதாகவும், அதனை சரிசெய்திட நடவடிக்கை எடுக்குமாறு நகராட்சி ஆணையருக்கு உத்தரவிட்டுள்ளது. மேலும், புதிய பேருந்து நிலையத்தில் இரு சக்கர வாகனத்திற்கு நிழற்குடை அமைக்கப்படவில்லையென்றும், எனவே, வேறு எதாவது பொது நிதியிலுருந்து நிழற்குடை அமைப்பதற்கு நகராட்சி ஆணையர் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.

3. உறுதி மொழி எண்.459/2006 : திருவண்ணாமலை மாவட்டம் அரசு மருத்துவமனையில் படுக்கை வசதி மற்றும் பெரிய கட்டிடம் கட்டித் தருவது குறித்து.

குழு மருத்துவமனைக்கு சென்றடைந்தபோது குழுவினரை சுகாதாரப் பணிகள் இணை இயக்குநர் டாக்டர் கிளாட்ஸ்டன் விஜயகுமார், மருத்துவ அலுவலர் டாக்டர் பொன்னுசாமி மற்றும் பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் திரு. தங்கபிரகாசம், உதவி செயற்பொறியாளர் திரு. ஆறுமுகம் ஆகியோர் வரவேற்று கீழ்க்கண்டவாறு தெரிவித்தனர். திருவண்ணாமலை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்களும் குழுவினை வரவேற்றார்.

மருத்துவமனையிலுள்ள புறநோயாளிகள் பிரிவு, பிரசவ வார்டு போன்றவற்றை குழு பார்வையிட்டது. அப்போது வார்டுகளில் மின்விளக்குகள் மற்றும் மின்விசிறிகள் சரிவர இயங்காமல் இருந்ததையும் உள் நோயாளிகளின் படுக்கைகளில் தலையணை மற்றும் பெட்சீட்டுகள் சுகாதாரமற்ற முறையில் இருந்ததை சுட்டிக்காட்டி இக்குறைபாடுகளை உடனடியாக களைந்திட பொதுப்பணித் துறை மற்றும் சுகாதாரத் துறை அதிகாரிகளுக்கு குழு உத்தரவிட்டது. மேலும், இம்மருத்துவமனையில் காலியாகவுள்ள இரண்டு டாக்டர்கள் மற்றும் 10 செவிலியர்கள், டெக்னீசியன்கள் மற்றும் துப்பரவுப் பணியாளர்களின் பணியிடங்களை உடனடியாக நிரப்புவதற்கு அரசுக்கு குழு பரிந்துரைத்தது.

இம்மருத்துமனையில் தமிழக அரசினுடைய ஹெல்த் ப்ராஜெக்ட் சிஸ்டத்தின்கீழ் உலக வங்கி நிதி உதவியுடன் ரூ.3 கோடி செலவில் 3 மாடிகளைக் கொண்டு 120 படுக்கை வசதிகளுடன் ஒரு அற்புதமான கட்டிடம் உருவாக இருக்கிறதை கண்டு குழு அரசை மனதார பாராட்டுகின்றது. மேலும் மருத்துவமனையில் உள்ள பராமரிப்புப் பணிகள் ஓரளவுக்கு திருப்திகரமாக இருக்கிறது என்றும் இப்படி தொடர்ந்து சுத்தமாக பராமரிக்க வேண்டுமென்று குழு கேட்டுக்கொண்டது.

4. உறுதி மொழி எண்.1093/2006 : திருவண்ணாமலை மாவட்டத்தில் சாத்தனூர் மற்றும் ஜவ்வாது மலைப்பகுதிகளை மேம்படுத்துவது குறித்து.

சாத்தனூர் அணைக்கு சென்றடைந்த குழுவினரை மாவட்ட வன அலுவலர் திரு.எஸ்.புவராஜ், சுற்றுலாத் துறை அலுவலர் திரு. இராதாகிருஷ்ணன், பொதுப்பணித்துறை செயற் பொறியாளர் திரு. வள்ளிக்கந்தன் மற்றும் உதவி செயற் பொறியாளர் ஆகியோர் வரவேற்று குழுவிற்கு அளிக்கப்பட்ட விவரங்களின் அடிப்படையில் குழுத் தலைவர் கீழ்க்கண்டவாறு குறிப்புரைத்தார்.

சாத்தனூர் அணைப்பகுதி மேம்பாட்டு பணிகளுக்காக மத்திய அரசின் சுற்றுலா மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.90 இலட்சம் ஒதுக்கப்பட்டு ஆணை வழங்கப்பட்டுள்ளது என்றும் மத்திய அரசின் வளர்ச்சி மற்றும் புனரமைப்பு திட்டத்தின்கீழ் மாவட்ட ஆட்சித் தலைவர் ரூ.27 இலட்சமும், சுற்றுலாத் துறை ரூ.27 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்து பணிகள் நடைபெற்று வருகின்றன என்றும் பேட்டரி மூலம் இரண்டு கார்கள் ரூ.10 இலட்சம் செலவில் வாங்கப்பட்டு இயங்கி வருகின்றன என்றும் ரூ.10 இலட்சம் செலவில் குடிநீர் வசதியும் மற்றும் ரூ.10 இலட்சம் செலவில் 6 படெல் படகுகளும், ரூ.10 இலட்சம் செலவில் இளைஞர் விடுதி மற்றும் ரூ.10 இலட்சம் செலவில் சாத்தனூர் அணைக்கு சாலை சீரமைக்கப்பட்டு பராமரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளன. தெற்காசியாவில் வேறு எங்கும் இல்லாத ஆளிற்கு 'இசை நீருற்றினை' அமைத்திட மாவட்ட ஆட்சித் தலைவர் முழு முயற்சி எடுத்து அதற்கான கருத்துருவை அரசுக்கு அனுப்பி வைத்திருக்கிறார் என்றும் எனவே, மேற்படி கோரிக்கைகளை நிறைவேற்றித் தந்திட தேவையான நிதியினை ஒதுக்கித்தர அரசுக்கு குழு பரிந்துரை செய்கிறது என்றார்.

5. உறுதி மொழி எண்.247/2006 : திருவண்ணாமலை வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு சொந்தக் கட்டிடம் கட்டப்படுவது குறித்து.

திருவண்ணாமலை வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு சொந்த கட்டிடம் கட்டுவது தொடர்பான உறுதிமொழி குறித்து ஆய்வு செய்வதற்காக சென்ற குழுவினரை பொதுப் பணித் துறை செயற் பொறியாளர் திரு.தங்கபிரகாசம் மற்றும் வட்டாரப் போக்குவரத்து அலுவலர் திரு.இராஜேந்திரன் ஆகியோர் வரவேற்று கீழ்க்கண்டவாறு குழுவிற்கு விளக்கினர்.

வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு சொந்த கட்டிடம் மற்றும் ஓட்டுநர் தேர்வு தளம் ஆகியவற்றை அமைக்க திருவண்ணாமலை வேங்கிக்காலில் உள்ள மாவட்ட பெருந்திட்ட வளாகத்தில் 5 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு ஒட்டுநர் தேர்வு தளம் 05.02.2004 முதல் அமைக்கப்பட்டு ஓட்டுநர் தேர்வுகள் நடத்தப்பட்டு வருகின்றது என்றும் தற்போது ரூ.1.25 கோடி செலவில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன என்றும், இப்பணிகள் மார்ச் 2008-க்குள் முடிவடையும் எனத் தெரிவிக்கப்பட்டது.

பொதுக் குறிப்புரைகள்.

5. அரசின் உறுதிமொழிகளை துறைகள் நிறைவேற்றுவதில் சில நேர்வுகளில் வருடக்கணக்கில் காலதாமதம் ஏற்படுகிறது. இத்தகைய காலதாமதங்கள் கண்டிப்பாகத் தவிர்க்கப்பட வேண்டும். துறையில் ஏற்படுகின்ற காலதாமதத்தினால், அரசின் நடவடிக்கையின் பலன், உரிய மக்களுக்கு சென்றடைய தாமதம் ஏற்படுகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர்கள் கொடுத்த உறுதிமொழிகள் மீது அரசுச் செயலாளர்களும், துறைத் தலைவர்களும், மாவட்ட ஆட்சியாளர்களும் உரிய காலத்தில் தக்க நடவடிக்கை எடுத்து அவற்றை நிறைவேற்ற முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் எனக் குழு வலியுறுத்துகிறது.

6. குழுவின் இவ்வறிக்கைக்கு 2008-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 29-ஆம் நாளன்று சென்னையில் நடைபெற்ற குழுக் கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பெற்றது.

சென்னை-600 009.
29 சனவரி 2008,
தை 15,
திருவள்ளுவர் ஆண்டு 2039.

தி. வேல்முருகன்,
தலைவர்,
அரசு உறுதிமொழிக் குழு.

இணைப்பு –1

திருவண்ணாமலை மாவட்டம், காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டிடம் கட்டுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	1
2.	துறையின் பெயர்	:	உள் துறை
3.	உறுதிமொழி எண்.	:	840/1999
4.	பொருள்	:	திருவண்ணாமலை மாவட்டம், காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டிடம் கட்டுவது குறித்து.
5.	உடுக்குறியிடாத வினா எண்	:	25968
	நாள்	:	22.11.1999
6.	உறுப்பினர் பெயர்	:	திரு. க. மணிவர்மா
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதல் அமைச்சர்.
			....திருவண்ணாமலை மாவட்டம், காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு புதிய கட்டிடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு காவல்துறைத் தலைமை இயக்குநரிடமிருந்து பெறப்பட்டு தற்பொழுது அரசின் பரிசீலனையில் உள்ளது.
8.	துறையின் பதில்	:	திருவண்ணாமலை மாவட்டம், காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகம் புதியதாக கட்டி முடிக்கப்பட்டு, 10.11.2004 முதல் செயல்பட்டு வருகிறது.
9.	குழு ஆய்வு செய்த நாள்	:	29.09.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திருவண்ணாமலை அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்திற்கு மாணவர் விடுதி கட்டுதல் குறித்து.

1.	வரிசை எண்.	:	4
2.	துறையின் பெயர்	:	தொழிலாளர் (ம) வேலைவாய்ப்புத் துறை
3.	உறுதிமொழி எண்.	:	317/2003
4.	பொருள்	:	திருவண்ணாமலை அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்திற்கு மாணவர் விடுதி கட்டுதல் குறித்து. 2003-2004 ஆம் ஆண்டுக்கான தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மானியக்கோரிக்கை மீதான விவாதம்
5.	மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை நாள்	:	23.04.2003
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. அன்வர் ராஜா, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சர். ...திருவண்ணாமலை அரசினர் பயிற்சி நிலையத்திற்கு ரூ.40.00 இலட்சம் செலவில் மாணவர் விடுதி கட்டப்படும்.
8.	துறையின் பதில்	:	திருவண்ணாமலை அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் மாணவர் விடுதி ரூ.40.00 இலட்சம் செலவில் 07.03.2005 அன்று கட்டி முடிக்கப்பட்டு நல்ல முறையில் இயங்கிவருகிறது.
9.	குழு ஆய்வு செய்த நாள்	:	29.09.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தொகுதி அனுக்காவூர் ஏரி மதகு உடைந்துள்ளதை சீர் செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பது குறித்து.

1.	வரிசை எண்.	:	5
2.	துறையின் பெயர்	:	பொதுப்பணித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	826/2003
4.	பொருள்	:	திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தொகுதி அனுக்காவூர் ஏரி மதகு உடைந்துள்ளதை சீர் செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பது குறித்து.
5.	உடுக்குறியிடாத வினா எண்	:	17962
6.	நாள்	:	3.11.2003
7.	உறுப்பினர் பெயர்	:	திரு. க. முருகவேல் ராஜன்
8.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.ஒ. பன்னீர்செல்வம், பொதுப்பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை (ம) வருவாய்த் துறை அமைச்சர். ...நடப்பு ஆண்டில் மழை காலத்திற்குப் பிறகு பணி மேற்கொள்ளப்படும்.
9.	துறையின் பதில்	:	திருவண்ணாமலை மாவட்டம் – வந்தவாசி தொகுதி – அனக்காவூர் ஏரி மதகு எண்.3 கடந்த 2001–ம் ஆண்டு வெள்ள பாதிப்புக்குள்ளானது. இதை சீர் செய்ய செய்யார் அணைக்கட்டு முறைப்பாசன பராமரிப்பு தலைப்பின்கீழ் 2002–03–ஆம் ஆண்டு ரூ.1.40 இலட்சத்திற்கு மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு, மதகு சீர் செய்யும் பணி 7/2003–ல், முடிக்கப்பட்டது. ஏரியில் மதகுகள் தற்போது நல்ல நிலையில் உள்ளன.
10.	குழு ஆய்வு செய்த நாள்	:	29.09.2007
11.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

TRUTH ALONE TRIUMPHS

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஒன்றியம், புலிவாய் ஊராட்சிக்கு நெற்களம் ஒன்று அமைக்க அரசு முன்வருமா என்பது குறித்து.

1.	வரிசை எண்.	:	6
2.	துறையின் பெயர்	:	வேளாண்மைத் துறை
3.	உறுதிமொழி எண்.	:	849/2003
4.	பொருள்	:	திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஒன்றியம், புலிவாய் ஊராட்சிக்கு நெற்களம் ஒன்று அமைக்க அரசு முன்வருமா என்பது குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண்	:	26535
6.	நாள்	:	03.11.2003
7.	உறுப்பினர் பெயர்	:	திரு. க. முருகவேல் ராஜன்
8.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர். ...2003-2004-ம் நிதியாண்டில் நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப மேற்கொள்ளப்படும்.
9.	துறையின் பதில்	:	வந்தவாசி ஊராட்சி ஒன்றியம், புலிவாய் ஊராட்சியில் நெற்களம் அமைக்கும் பணி 2003-04-ம் ஆண்டு சம்பூர்ண கிராமின் ரோஜ்கர் யோஜனா இனம்-1 திட்டத்தின்கீழ் தொகை ரூ.60,000/- மதிப்பீட்டில் (செலவு சீட்டு எண். 57/20.10.03) பணி செய்து முடிக்கப்பட்டது.
10.	குழு ஆய்வு செய்த நாள்	:	29.09.2007
11.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஒன்றியத்தில், வெண்மந்தை ஊராட்சியில் நெற்களம் அமைக்க அரசு முன்வருமா என்பது குறித்து.

1.	வரிசை எண்.	:	7
2.	துறையின் பெயர்	:	வேளாண்மைத் துறை
3.	உறுதிமொழி எண்.	:	850/2003
4.	பொருள்	:	திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஒன்றியத்தில், வெண்மந்தை ஊராட்சியில் நெற்களம் அமைக்க அரசு முன்வருமா என்பது குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண்.	:	26537
6.	நாள்	:	03.11.2003
7.	உறுப்பினர் பெயர்	:	திரு. க. முருகவேல் ராஜன்
8.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.எம்.சி. சம்பத். உள்ளாட்சித் துறை அமைச்சர்
			...வரும் நிதியாண்டில் நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப மேற்கொள்ளப்படும்.
9.	துறையின் பதில்	:	வந்தவாசி ஊராட்சி ஒன்றியம், வெண்மந்தை ஊராட்சியில் நெற்களம் அமைக்கும் பணி 2005-06-ம் ஆண்டு சம்பூர்ண கிராமின் ரோஜ்கர் யோஜனா இனம்-2 திட்டத்தின்கீழ் தொகை ரூ.60,000/-மதிப்பீட்டில் (செலவு சீட்டு எண்.1/21.03.06) பணி செய்து முடிக்கப்பட்டது.
10.	குழு ஆய்வு செய்த நாள்	:	29.09.2007
11.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தொகுதி, தென் இலுப்பை கிராமத்தில் நெற்களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பது குறித்து.

1.	வரிசை எண்.	:	8
2.	துறையின் பெயர்	:	வேளாண்மைத் துறை
3.	உறுதிமொழி எண்.	:	894/2003
4.	பொருள்	:	திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தொகுதி, தென் இலுப்பை கிராமத்தில் நெற்களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பது குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண்.	:	21838.
6.	நாள்	:	04.11.2003
7.	உறுப்பினர் பெயர்	:	திரு. க. முருகவேல் ராஜன்
8.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி துறை அமைச்சர்	:	மாண்புமிகு திரு.இரா. நீவானந்தம், வேளாண்மைத் ...திருவண்ணாமலை மாவட்டம், தென் இலுப்பை கிராமத்தில் அடுத்த நிதியாண்டில் நெற்களம் அமைப்பது குறித்து ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.
9.	துறையின் பதில்	:	தென்இலுப்பை ஊராட்சியில் 2003-04-ம் ஆண்டு எஸ்.ஜி.ஆர்.ஒய். இனம்-1 திட்டத்தின் கீழ் ரூ.60,000/- மதிப்பீட்டில் ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடம் எதிரில் நெற்களம் கட்டப்பட்டு உள்ளது. மேலும் தென்இலுப்பை ஊராட்சியின் மதுரா கிராமமான நூத்தாம்பாடியில் ரூ.60,000/- மதிப்பீட்டில் எஸ்.ஜி.ஆர்.ஒய்.-இனம்-2 திட்டத்தின்கீழ் 2003-04-ம் ஆண்டில் சிமெண்ட் களம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.
10.	குழு ஆய்வு செய்த நாள்	:	29.09.2007
11.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை தொகுதியில் உள்ள 'குரும்பங்களிங்கன் ஏரி' கிராமத்தில் உள்ள ஆரம்பப் பள்ளியை திறக்க வேண்டியதன் அவசியம் குறித்து.

1.	வரிசை எண்.	:	9
2.	துறையின் பெயர்	:	பள்ளிக் கல்வித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	6/2004
4.	பொருள்	:	திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை தொகுதியில் உள்ள ' குரும்பங்களிங்கன் ஏரி' கிராமத்தில் உள்ள ஆரம்பப் பள்ளியை திறக்க வேண்டியதன் அவசியம் குறித்து.
5.	ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்		
6.	நாள்	:	06.02.2004
7.	உறுப்பினர் பெயர்	:	திரு. கு. பிச்சாண்டி
8.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.செ. செம்மலை, கல்வி அமைச்சர். ...அது குறித்து அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுத்து அந்தப் பள்ளி தொடர்ந்து நடைபெறுவதற்கு நடவடிக்கை எடுக்கும்.
9.	துறையின் பதில்	:	மாணவர்கள் வருகை இன்மையால் ஆரம்பப் பள்ளி மூடப்பட்டது. தற்போது மாணவர்கள் சேர்க்கை விதம் அதிகரித்துள்ளமையால் பள்ளி மீண்டும் திறக்கப்பட்டு கடந்த இரண்டு ஆண்டுகாலமாக பள்ளி செயல்பட்டு வருகிறது.
10.	குழு ஆய்வு செய்த நாள்	:	29.09.2007
11.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

TAMILNADU LEGISLATURE
TRUTH ALONE TRIUMPHS

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தொகுதி படவேடு துணை கால்நடை மருந்தகத்தை கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படுமா என்பது குறித்து.

1.	வரிசை எண்.	:	10
2.	துறையின் பெயர்	:	கால்நடை பராமரிப்பு பால்வளம் (ம) மீன்வளத் துறை
3.	உறுதிமொழி எண்.	:	271/2004
4.	பொருள்	:	திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தொகுதி படவேடு துணை கால்நடை மருந்தகத்தை கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படுமா என்பது குறித்து.
5.	2004–2005 ஆம் ஆண்டுக்கான கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை – கால்நடை பராமரிப்பு மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம். மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை		
6.	நாள்	:	30.07.2004
7.	உறுப்பினர் பெயர்	:	திருமதி நளினி மனோகரன்
8.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் ...மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை கனிவுடன் பரிசீலிக்கப்படும்.
9.	துறையின் பதில்	:	திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், படவேடு கிராமத்தில் எற்கனவே இயங்கி வந்த கால்நடை மருத்துவ கிளை நிலையம் அரசாணை (நிலை) எண்.148 கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை, நாள்:08.12.2004–ன்படி 2004–05–ம் ஆண்டில் கால்நடை மருந்தகமாக தரம் உயர்த்தப்பட்டது. படவேடு புதிய கால்நடை மருந்தகம் 01.01.2005 முதல் செயல்பட்டு வருகிறது.
10.	குழு ஆய்வு செய்த நாள்	:	29.09.2007
11.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர், சேத்துப்பட்டு, தேசூர் பொதுமக்களுக்குப் பயன்படக்கூடிய வகையில் நகரப் பேருந்துகளை இயக்க அரசு முன்வருமா என்பது குறித்து.

1.	வரிசை எண்.	:	11
2.	துறையின் பெயர்	:	போக்குவரத்து துறை
3.	உறுதிமொழி எண்.	:	289/2004
4.	பொருள்	:	திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர், சேத்துப்பட்டு, தேசூர் பொதுமக்களுக்குப் பயன்படக்கூடிய வகையில் நகரப் பேருந்துகளை இயக்க அரசு முன்வருமா என்பது குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண்./ துணை வினா	:	18329
6.	நாள்	:	31.07.2004
7.	உறுப்பினர் பெயர்	:	திரு. ஆ.கு.சீ. அன்பழகன்
8.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.இரா. வீரபாநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர் ...அதை அவர்கள் கோரிக்கையாக எழுதிக் கொடுத்தால் அதை அரசு பரிவுடன் கவனிக்கும்
9.	துறையின் பதில்	:	திருவண்ணாமலை மாவட்டம் பெரணமல்லூர், சேத்துப்பட்டு, தேசூர் ஆகிய ஊர்களின் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் கீழ்க்கண்ட நகரப் பேருந்துகள் தற்போது இயக்கப்பட்டு வருகிறது.

பெரணமல்லூர்	நகரத்தடம் எண்	நடைகள்
ஆரணி–பெரணமல்லூர்	A5	6
வந்தவாசி–பெரணமல்லூர்	W5	6
வந்தவாசி–செப்டாங்குளம் (வழி) பெரணமல்லூர்	W4	6
செய்யாறு–பெரணமல்லூர் சேத்துப்பட்டு	T13	10
ஆரணி–சேத்துப்பட்டு (வழி) கரிப்பூர்	A16	6
ஆரணி–சேத்துப்பட்டு (வழி) விண்ணமங்கலம்	A18	6
ஆரணி–சேத்துப்பட்டு (வழி) விண்ணமங்கலம்	A23	8
வந்தவாசி–சேத்துப்பட்டு	W3	2

வந்தவாசி–சேத்துப்பட்டு	W7	10
வந்தவாசி–சேத்துப்பட்டு	W9	2
வந்தவாசி–சேத்துப்பட்டு	W11	3

தேசூர்	நகரத்தடம் எண்	நடைகள்
வந்தவாசி–தேசூர்	W2	6
வந்தவாசி–வடக்குப்பட்டு (வழி) தேசூர்	W7	2
சேத்துப்பட்டு–தெள்ளாறு (வழி) தேசூர்	W11	8
வந்தவாசி–வெடால்	W12	4
செய்யாறு–தேசூர்	T58	8
செய்யாறு–மடம்	T59	2

பெரணமல்லூர், தேசூர், சேத்துப்பட்டு ஆகிய பகுதிகளுக்கு தற்போதுள்ள போக்குவரத்து நெரிசலுக்கு தற்போது இயக்கப்படும் பேருந்துகள் போதுமானதாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

10. குழு ஆய்வு செய்த நாள் : 29.09.2007

11. குழுவின் கருத்து : நிறைவேற்றப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தொகுதி, தெள்ளார் ஊராட்சி ஒன்றியம்,கொடியாலம் கிராமத்தில் ஆழ்துளைக் கிணறு மற்றும் மேல்நிலைநீர்த்தேக்கத் தொட்டி அமைக்கக் கோருவது குறித்து.

1.	வரிசை எண்.	:	12
2.	துறையின் பெயர்	:	ஊரக வளர்ச்சித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	31/2005
4.	பொருள்	:	திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தொகுதி, தெள்ளார் ஊராட்சி ஒன்றியம், கொடியாலம் கிராமத்தில் ஆழ்துளைக் கிணறு மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கக் கோருவது குறித்து.
5.	உடுக்குறியிடாத வினா எண் துணை வினா	:	15928
6.	நாள்	:	03.02.2005
7.	உறுப்பினர் பெயர்	:	திரு. க. முருகவேல்ராஜன்
8.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் ...இப்பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு, திட்டம் மக்கள் பயனுக்கு கொண்டு வரப்படும்
9.	துறையின் பதில்	:	தெள்ளார் ஊராட்சி ஒன்றியத்தில் கொடியாலம் ஊராட்சியில் ஒரு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர் தேக்க தொட்டி ஆழ்துளை கிணற்று நீர் ஆதாரத்துடன் பணிகள் முடிக்கப்பட்டு திட்டம் மக்கள் பயனுக்கு கொண்டு வரப்பட்டு தற்போது ஊராட்சியின் பராமரிப்பில் உள்ளது. ஆழ்துளை குழாய் கிணற்றில் நீர்வரத்து குறைந்து விட்ட காரணத்தால் ஊராட்சியின் மூலம் அமைக்கப்பட்டுள்ள திறந்தவெளி கிணற்றை நிரந்தரமாக கொண்டு தற்போது புனரமைப்பு திட்டத்தின் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு குடிநீர் திட்டப்பணிகள் முடிக்கப்பட்டு மக்கள் பயனுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.
10.	குழு ஆய்வு செய்த நாள்	:	29.09.2007
11.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் கோவிலினுடைய அத்தனை தேர்களுக்கும் பெல் நிறுவனத்தின் மூலம் இரும்புச் சக்கரங்கள் அமைத்துத் தருவது குறித்து.

1.	வரிசை எண்.	:	13
2.	துறையின் பெயர்	:	தமிழ்வளர்ச்சி பண்பாடு (ம) அறநிலையத் துறை
3.	உறுதிமொழி எண்.	:	417/2005
4.	பொருள்	:	திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் கோவிலினுடைய அத்தனை தேர்களுக்கும் பெல் நிறுவனத்தின் மூலம் இரும்புச் சக்கரங்கள் அமைத்துத் தருவது குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண் துணை வினா	:	72726
6.	நாள்	:	11.04.2005
7.	உறுப்பினர் பெயர்	:	திரு. கு. பிச்சாண்டி
8.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.பி.கி. ராமசாமி, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் ...அரசு நடவடிக்கை எடுக்கும்
9.	துறையின் பதில்	:	இத்திருக்கோயிலின் திருத்தேர்கள் ஐந்து ஆகும். இத்திருக்கோயிலில் உள்ள அருள்மிகு சுவாமி தேருக்கு, வேலூர் மாவட்டம், ராணிப்பேட்டை பெல் நிறுவனத்தின் மூலம் 1995-ஆம் ஆண்டு இரும்பு சக்கரங்கள் மற்றும் ஹைட்ராலிக் பிரேக்செட் பொறுத்தப்பட்டு உள்ளது.அருள்மிகு அம்மன் தேருக்கு திருச்சி பெல் நிறுவனத்தின் மூலம் இரும்பு சக்கரங்களும், ஹைட்ராலிக் பிரேக் செட்டும் 2005-ல் பொறுத்தப்பட்டுள்ளது.அருள்மிகு வினாயகர், அருள்மிகு சுப்ரமணியர் ஆகிய இரண்டு தேர்களுக்கும் திருச்சி பெல் நிறுவனத்தின் மூலம் 2006-ல் இரும்பு சக்கரம் பொருத்தப்பட்டுள்ளது. இத்திருக்கோயிலில் உள்ள 5 தேர்களில் 4 தேர்களுக்கு பெல் நிறுவனம் மூலம் இரும்பு சக்கரம் பொருத்தப்பட்டுள்ளது. கடந்த 2005-ல் புதியதாக செய்யப்பட்ட சிறிய தேர் அருள்மிகு சண்டிகேஸ்வரர் தேர் ஆகையால் அதற்கு இரும்பு சக்கரம் பொருத்த தேவையேற்படவில்லை. சிறிய தேர் ஆகையால் இரும்பு சக்கரம் பொருத்தப்பட்டால், மிக வேகமாக செல்லக்கூடிய நிலை கருதி மரச்சக்கரம் பயன்படுத்தப்பட்டு வருகிறது.
10.	குழு ஆய்வு செய்த நாள்	:	29.09.2007
11.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் திருக்கோயிலுக்கு தங்கத்தேர் நிறுவும் திட்டம் குறித்து.

1.	வரிசை எண்.	:	14
2.	துறையின் பெயர்	:	தமிழ்வளர்ச்சி பண்பாடு (ம) அறநிலையத் துறை
3.	உறுதிமொழி எண்.	:	483/2005
4.	பொருள்	:	திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் திருக்கோயிலுக்கு தங்கத்தேர் நிறுவும் திட்டம் குறித்து.
5.	உடுக்குறியிடாத வினா எண்	:	10357
6.	நாள்	:	13.04.2005
7.	உறுப்பினர் பெயர்	:	திரு. கு. பிச்சாண்டி
8.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.பி.கி. ராமசாமி, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்
			...திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயிலுக்கு புதிதாக தங்கரதம் செய்ய மேற்படி திருக்கோயிலின் அறங்காவலர் குழு தீர்மானம் இயற்றியுள்ளது. இதன் தொடர்ச்சியாக பொது மக்கள் பங்களிப்பு குறித்தும் மதிப்பீடுகள் தயாரிப்பது குறித்தும் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.
9.	துறையின் பதில்	:	இத்திருக்கோயிலுக்கு 16 அடி 6-7/8 அங்குல உயரம் உள்ள தங்கரதம் ஆணையர் ந.க.எண்.34696/2004/இ2/ நாள்:10.06.2005 அனுமதியின்படி ரூ.84,01,775/- மதிப்பீட்டில் செய்து முடிக்கப்பட்டு 16.03.2006 அன்று வெள்ளோட்டம் விடப்பட்டது. பக்தர்களால் அவரவர் பிரார்த்தனையின்படி ரூ.1,500/- கட்டணம் செலுத்தி தங்கத்தேர் இழுக்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது.
10.	குழு ஆய்வு செய்த நாள்	:	29.09.2007
11.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திருவண்ணாமலை மாவட்டம், ஆண்டாப்பட்டு கிராமத்திற்கு நகரப் பேருந்து சென்று வர ஆவன செய்வது குறித்து.

1.	வரிசை எண்.	:	15
2.	துறையின் பெயர்	:	போக்குவரத்து துறை
3.	உறுதிமொழி எண்.	:	11/2006
4.	பொருள்	:	திருவண்ணாமலை மாவட்டம். ஆண்டாப்பட்டு கிராமத்திற்கு நகரப் பேருந்து சென்று வர ஆவன செய்வது குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண்	:	18914
6.	நாள்	:	17.01.2006
7.	உறுப்பினர் பெயர்	:	திரு. எ.வ. வேலு
8.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் ....அரசு ஆவன செய்யும்
9.	துறையின் பதில்	:	திருவண்ணாமலை வட்டம் ஆண்டாப்பட்டு கிராமத்திற்கு நகரப்பேருந்து டி45 தினசரி 4 நடைகள் 02.05.2007 முதல் இயக்கப்பட்டு வருகிறது.
10.	குழு ஆய்வு செய்த நாள்	:	29.09.2007
11.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலையை தலைமையிடமாகக் கொண்டு கூடுதலாக புதிய மண்டலம் ஒன்று தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் விழுப்புரத்தின் கீழ் துவங்கப்படுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	16
2.	துறையின் பெயர்	:	போக்குவரத்துத் துறை
3.	உறுதிமொழி எண்.	:	352/2006
4.	பொருள்	:	திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலையை தலைமையிடமாகக் கொண்டு கூடுதலாக புதிய மண்டலம் ஒன்று தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் விழுப்புரத்தின் கீழ் துவங்கப்படுவது குறித்து.
5.	2006-2007 ஆம் ஆண்டுக்கான போக்குவரத்துக் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை		
6.	நாள்	:	09.08.2006
7.	உறுப்பினர் பெயர்	:	
8.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர் ...துவங்கப்படும்
9.	துறையின் பதில்	:	திருவண்ணாமலையை தலைமையிடமாகக் கொண்டு கூடுதலாக புதிய திருவண்ணாமலை மண்டலம் ஒன்று தஅபோகழகம்(வி)லிட்., கீழ் 22.01.2007 முதல் துவக்கப்பட்டு தற்போது இயங்கி வருகிறது.
10.	குழு ஆய்வு செய்த நாள்	:	29.09.2007
11.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை நகரில் கல்லூரிகளையும், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தையும் இணைத்து நகரப் பேருந்துவிட நடவடிக்கை எடுப்பது குறித்து.

1.	வரிசை எண்.	:	17
2.	துறையின் பெயர்	:	போக்குவரத்துத் துறை
3.	உறுதிமொழி எண்.	:	359/2006
4.	பொருள்	:	திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை நகரில் கல்லூரிகளையும், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தையும் இணைத்து நகரப் பேருந்துவிட நடவடிக்கை எடுப்பது குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண் துணை வினா	:	656
6.	நாள்	:	10.08.2006
7.	உறுப்பினர் பெயர்	:	திரு. கு.பிச்சாண்டி
8.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்
			...புதிய பேருந்துகள் அந்தப் பகுதியிலே விடப்படும்
9.	துறையின் பதில்	:	திருவண்ணாமலை நகரில் கல்லூரிகளையும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தையும் இணைத்து 2 நகரப்பேருந்துகள் 02.08.2007 முதல் இயக்கப்பட்டு வருகின்றது.
10.	குழு ஆய்வு செய்த நாள்	:	29.09.2007
11.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதிக்குட்பட்ட வந்தவாசியிலிருந்து செப்டங்குளம் வரை இயக்கப்பட்ட நகரப் பேருந்தை மீண்டும் இயக்குவது குறித்து.

1.	வரிசை எண்.	:	18
2.	துறையின் பெயர்	:	போக்குவரத்துத் துறை
3.	உறுதிமொழி எண்.	:	650/2006
4.	பொருள்	:	திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதிக்குட்பட்ட வந்தவாசியிலிருந்து செப்டங்குளம் வரை இயக்கப்பட்ட நகரப் பேருந்தை மீண்டும் இயக்குவது குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண் துணை வினா	:	443
6.	நாள்	:	18.08.2006
7.	உறுப்பினர் பெயர்	:	திரு.கோ. எதிரொலி மணியன்
8.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர் ...ஆய்வுக்குப் பிறகு அதையெல்லாம் ஏற்கப்படும்
9.	துறையின் பதில்	:	பெரணமல்லூர் தொகுதிக்குட்பட்ட செப்டாங்குளத்திற்கு கோரிக்கையினடி நகரத்டம் எண்.W4 வந்தவாசி–செப்டாங்குளம் என தினசரி 6 நடைகள் மீண்டும் 15.09.2006 முதல் இயக்கப்பட்டு வருகிறது.
10.	குழு ஆய்வு செய்த நாள்	:	29.09.2007
11.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திருவண்ணாமலை மாவட்டத்தில் நவீன விளையாட்டு அரங்கை விரைந்து கட்டுவதற்கும், அரங்கில் ஒரு நீச்சல் குளம் அமைத்துத் தருவதற்கும் ஆவன செய்தல்

1.	வரிசை எண்.	:	19
2.	துறையின் பெயர்	:	இளைஞர் நலன் (ம) விளையாட்டு மேம்பாட்டுத் துறை
3.	உறுதிமொழி எண்.	:	744/2006 (ம) 110/2007
4.	பொருள்	:	திருவண்ணாமலை மாவட்டத்தில் கட்டப்படுகின்ற நவீன விளையாட்டு அரங்கை விரைந்து கட்டுவதற்கும் அரங்கில் ஒரு நீச்சல் குளம் அமைத்துத் தருவதற்கும் ஆவன செய்வது குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண் துணை வினா	:	464
6.	நாள்	:	14.08.2006 (ம) 27.03.2007
7.	உறுப்பினர் பெயர்	:	திரு.கோ. எதிரொலி மணியன்
8.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி (ம) திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு திரு டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச் சூழல் துறை அமைச்சர்
			...அந்தப் பணி சீக்கிரமாக நடைபெறும். நீச்சல் குளம் சம்பந்தமாக இந்த அரசு மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று ஆவன செய்யும்.
9.	துறையின் பதில்	:	திருவண்ணாமலை மாவட்டத்தில் ரூ.48.40 இலட்சம் மதிப்பிட்டிலான விளையாட்டு அரங்கம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இவ்விளையாட்டரங்கில் ரூ.66/–இலட்சத்திலான நீச்சல் குளம் அமைக்கும் பணி தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. விரைவில் முடித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
10.	குழு ஆய்வு செய்த நாள்	:	29.09.2007
11.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

திருவண்ணாமலை தொகுதி, கீழ்பென்னாத்தூர் ஆரம்ப சுகாதார மைய வளாகத்தில் உள்ள பழைய கட்டடங்களை பழுது பார்க்கவும், புதிய கட்டடங்களை கட்டுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	20
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு (ம) குடும்பநலத் துறை
3.	உறுதிமொழி எண்.	:	1265/2006
4.	பொருள்	:	திருவண்ணாமலை தொகுதி, கீழ்பென்னாத்தூர் ஆரம்ப சுகாதார மைய வளாகத்தில் உள்ள பழைய கட்டடங்களை பழுது பார்க்கவும், புதிய கட்டடங்களை கட்டுவது குறித்து.
5.	உடுக்குறியிடாத வினா எண்	:	995
6.	நாள்	:	02.09.2006
7.	உறுப்பினர் பெயர்	:	திரு.கு. பிச்சாண்டி
8.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்
			...2006-2007 நடப்பு நிதியாண்டில் போதிய நிதி ஒதுக்கீடு வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது
9.	துறையின் பதில்	:	திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் ஆரம்ப சுகாதார நிலையம் 2006-2007-ம் ஆண்டில் 2059-01-05 சிபி எம் ஆர் தலைப்பின்கீழ் ரூ.5 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பழுதுபார்ப்பு பணிகள் முடித்து கீழ்பென்னாத்தூர் ஆரம்ப சுகாதார நிலைய வட்டார மருத்துவ அலுவலரிடம் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டு விட்டது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.
10.	குழு ஆய்வு செய்த நாள்	:	29.09.2007
11.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் தொகுதி அம்மாபாளையத்தில் பால் குளிரூட்டும் மையம் அமைப்பது குறித்து.

1.	வரிசை எண்.	:	21
2.	துறையின் பெயர்	:	கால்நடை பராமரிப்பு (ம) மீன்வளத் துறை
3.	உறுதிமொழி எண்.	:	30/2007
4.	பொருள்	:	திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் தொகுதி அம்மாபாளையத்தில் பால் குளிரூட்டும் மையம் அமைப்பது குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண் துணை வினா	:	3420
6.	நாள்		24.01.2006
7.	உறுப்பினர் பெயர்	:	திரு. போளூர் ம. வரதன்
8.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால்வளத் துறை அமைச்சர்
			..திருவண்ணாமலையிலே வருகின்ற நிதியாண்டில் பால் Powder Plant நிறுவப்படும் வேளையில் உறுப்பினருடைய கோரிக்கை நிறைவேற்றப்படும்.
9.	துறையின் பதில்	:	திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் வட்டம், மேல்முடியனூர் அம்மாபாளையம் கிராமத்தில் 32 ஏக்கர் நிலப்பரப்பில் இரண்டு லட்சம் லிட்டர் பால் கொள் திறன் கொண்ட பால்பவுடர் தொழிற்சாலை அமைக்க தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் அனுமதியும், ஆணையர்/ பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை அவர்களின் நிர்வாக ஒப்புதலும் பெறப்பட்டு மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களால் 02.08.2007 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு அதற்கான பணி விரைவாக நடைபெறு வருகிறது. இரண்டு லட்சம் லிட்டர் பால் கொள் திறன் கொண்ட பால்பத நிலையம் அமைக்கப்படுவதால் தனியாக பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கத் திட்டம் ஏதும் இல்லை.
10.	குழு ஆய்வு செய்த நாள்	:	29.09.2007
11.	குழுவின் கருத்து	:	படித்துப்பதிவு செய்யப்பட்டது.

திருவண்ணாமலை மாவட்டம், ஜமுனாமருதூரில் மீமன் நீர்வீழ்ச்சியில் மின் உற்பத்தி நிலையம் அமைக்க வேண்டியது குறித்து.

1.	வரிசை எண்.	:	22
2.	துறையின் பெயர்	:	எரிசக்தித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	671/2007
4.	பொருள்	:	திருவண்ணாமலை மாவட்டம், ஜமுனாமருதூரில் மீமன் நீர்வீழ்ச்சியில் மின் உற்பத்தி நிலையம் அமைக்க வேண்டியது குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண் துணை வினா	:	477
6.	நாள்	:	23.04.2007
7.	உறுப்பினர் பெயர்	:	திரு.கு. பிச்சாண்டி
8.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர் ...ஒரு ஆறு மாத காலத்திற்காகவது அந்த நீர்வீழ்ச்சியில் தண்ணீர் வருமானால் அந்த திட்டத்தை எடுத்துக் கொள்வதற்கு அரசாங்கம் முயற்சிக்கும்.
9.	துறையின் பதில்	:	தமிழக அரசால் ஜமுனாமரத்தூரில் மீமன் நீர்வீழ்ச்சியில் நீர் தேக்கி அணை கட்டினால் மட்டுமே சாத்தியக்கூறுகளின் அடிப்படையில் மின் உற்பத்தி நிலையம் அமைக்க வாரிய விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்படும்.
10.	குழு ஆய்வு செய்த நாள்	:	29.09.2007
11.	குழுவின் கருத்து	:	படித்துப்பதிவு செய்யப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, தேள்ளார், மழையூர், தேரூர், பொன்னூர், கொம்மனேந்தல், தச்சாம்பாடி வடமாதிமங்கலம், சேத்துப்பட்டு ஆகிய இடங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் 2 மருத்துவர்கள் மட்டும் உள்ளதால், அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் மருத்துவர்களை நியமிக்க ஆவன செய்வது குறித்து.

1.	வரிசை எண்.	:	23
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு (ம) குடும்பநலத் துறை
3.	உறுதிமொழி எண்.	:	821/2007
4.	பொருள்	:	திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, தெள்ளார், மழையூர், தேரூர், பொன்னூர், கொம்மனேந்தல், தச்சாம்பாடி வடமாதிமங்கலம், சேத்துப்பட்டு ஆகிய இடங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் 2 மருத்துவர்கள் மட்டும் உள்ளதால், அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் மருத்துவர்களை நியமிக்க ஆவன செய்வது குறித்து.
5.	உடுக்குறியிடாத வினா எண்	:	1629
6.	நாள்	:	25.04.2007
7.	உறுப்பினர் பெயர்	:	திரு.கோ. எதிரொலி மணியன்
8.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ...மருத்துவர் பணியிடங்களை நிரப்ப பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.
9.	துறையின் பதில்	:	

	தோற்றுவிக்கப்பட்ட பணியிடம்	காலியிடம் உள்ளவர்கள்	
கொம்மனந்தல்	2	2	இல்லை
தச்சாம்பாடி	2	2	இல்லை
வடமாதி மங்கலம்	2	2	இல்லை
சேத்பட்டு	3	3	இல்லை

மேற்கண்ட ஆரம்ப நிலையங்களில் மருத்துவர் பணியிடம் அரசாணையின்படி முழுமையாக நிரப்பப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

10.	குழு ஆய்வு செய்த நாள்	:	29.09.2007
11.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

இணைப்பு 2

குழு கூடிய நாட்கள் பற்றிய விவரம்

17.8.2006	சென்னை
1.9.2006	சென்னை
5.12.2006	சென்னை
12.12.2006 13.12.2006	மதுரை திண்டுக்கல்
2.1.2007 முதல் 11.1.2007 வரை	வடமாநிலங்களில் ஆய்வுப்பயணம் அந்தமான்–நிக்கோபர், கொல்கத்தா, புதுதில்லி, ஆக்ரா, அமிர்தசரஸ் மற்றும் மும்பை
9.4.2007	சென்னை
23.4.2007	சென்னை
13.6.2007	சென்னை
12.7.2007 13.7.2007	கோயம்புத்தூர்
14.7.2007	நீலகிரி
2.8.2007 3.8.2007	சென்னை
16.8.2007 17.8.2007 18.8.2007	காஞ்சிபுரம் விழுப்புரம் கடலூர்
6.9.2007 7.9.2007	சென்னை
27.9.2007 28.9.2007	வேலூர்
29.9.2007	திருவண்ணாமலை

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS



அரசு கோட்டை அதிரடிப்படை, சென்னை — 600 079.